## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள திருப்பெரும்புதூர் - காஞ்சிபுரம் நாடாளுமன்ற தொகுதிகளுக்கான

# ‘இந்தியா’ கூட்டணி கட்சிகளின் தேர்தல் பணிக் குழுக்கள்!

### மாவட்ட தி.மு.க செயலாளர்–அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



வருகிற 2024-நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் தேர்தல் பணிகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய திருப்பெரும்புதூர் - காஞ்சிபுரம் (தனி) ஆகிய 2 நாடாளுமன்ற தொகுதிகளில் இந்தியா கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செம்மையாக செயல்படுத்துவதற்காக, கீழ்கண்டவாறு அந்த 2 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் இந்தியா கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் அடங்கிய நடாளுமன்ற தேர்தல் பணிக்குழுவை அமைத்துள்ளோம்.

நாடாளுமன்ற தொகுதி வாரியாக அமைக்கப்பட்டுள்ள இந்த தேர்தல் பணிக்குழுவில் இந்தியா கூட்டணி சார்பில் இடம் பெற்றுள்ள நிர்வாகிகள் பெயர்கள் வருமாறு:-

### 2024 - நாடாளுமன்றத் தேர்தல் பணிக்குழு

**5.திருப்பெரும்புதூர் நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு**

| | | |
|---|---|---|
| தி.மு.க | : | தா.மோ அன்பரசன், மீ.அ.வைதியலிங்கம் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, க.வசந்தகுமாரி, படப்பை ஆ. மனோகரன் |
| காங்கிரஸ் | : | ஆர்.எஸ் செந்தில் குமார், கே.வி. திலகர், எஸ். ஜெ. நிக்கோலஸ் |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் | : | க. பீம்ராவ், இரா. வேல்முருகன், இ.முத்துக்குமார், சி, சங்கர் |
| இந்திய கம்யூனிஸ்ட் | : | எல். மேகநாதன், ப. கார்த்திக், ஏ.ராஜ்குமார், |
| ம.தி.மு.க | : | சைதை சுப்பிரமணியன், மா.வை மகேந்திரன், |
| முஸ்லிம் லீக் | : | எஸ். பீர்முகமது, எஸ். முகமது பேக், எஸ் அல்லாபக்ஷ் |
| விடுதலைச் சிறுத்தைகள் | : | ப. சாமுவேல் எபினேசர், திருநீர்மலை தமிழரசன், சைதை மா.ஜேக்கப், மேனகாதேவி கோமகன் |
| மனித நேய மக்கள் கட்சி | : | எம்.யாக்கூப், ஜெ. சலீம்கான்,டி. முகமது யூசப், எஸ்.கே ஜாகிர் உசேன் |
| திராவிட கழகம் | : | பா. முத்தையன், வேலூர் பாண்டு, ஏ.வி முரளி |
| தமிழக வாழ்வுரிமை கட்சி | : | தாம்பரம் பி. முருகன் |
| திராவிடர் இயக்க தமிழர் பேரவை | : | இ. இளமாறன் |
| விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி | : | என். லட்சுமணன், எ. வெற்றிசெல்வன், எஸ். குமார் |

**6.காஞ்சிபுரம் (தனி) நாடாளுமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி தேர்தல் பணிக்குழு**

| | | |
|---|---|---|
| தி.மு.க | : | தா.மோ அன்பரசன், வீ.தமிழ்மணி, வரலட்சுமி மதுசூதனன், டி.மூர்த்தி, வெ.விசுவநாதன் |
| காங்கிரஸ் | : | ஆர். எஸ் செந்தில்குமார், சுந்தரமூர்த்தி |
| மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் | : | இ.சங்கர், ப.சு பாரதி, இ.முத்துகுமார், |
| இந்திய கம்யூனிஸ்ட் | : | எல். மேகநாதன், ஏ, ராஜ்குமார் |
| ம.தி.மு.க | : | ஊனை பார்த்தீபன் |
| முஸ்லிம் லீக் | : | கே. ஷேக் தாவூத், எஸ். அல்லாபக்ஷ் |
| விடுதலைச் சிறுத்தைகள் | : | கானல்விழி, கு.தென்னவன் |
| மனித நேய மக்கள் கட்சி | : | எஸ்.எம். ஷாஜகான், எஸ்.கே. ஜாகிர் உசேன், ஏ.எஸ்.முகமது ரபி |
| திராவிடர் கழகம் | : | பா. முத்தையன், வேலூர் பாண்டு, சுந்தரம், |
| தமிழக வாழ்வுரிமை கட்சி | : | ஏ. செல்லா |
| திராவிட இயக்க தமிழர் பேரவை | : | இ. இளமாறன் |
| விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி | : | வி. சதாசிவம் |

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்,**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

## சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில்

# திருவொற்றியூரில் ரூ. 34.67 கோடி செலவில் கடற்கரையை சீரமைக்கும் பணி!

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவொற்றியூர், மார்ச் 19-

திருவொற்றியூர் கடற்கரை பகுதிக்கு காலை மற்றும் மாலை நேரங்களில் ஏராளமான பொதுமக்கள் குடும்பத்துடன் வந்து பொழுது கழிக்கின்றனர். குறிப்பாக இயற்கையான சூழலில் உடற்பயிற்சி யோகா போன்றவைகளை மேற்கொள்ள ஏராளமான பொதுமக்கள் கடற்கரைக்கு வருகின்றனர்.

எனவே இந்த கடற்கரையை அழகு படுத்த வேண்டும் என்று சட்டமன்ற கூட்டத்தொடரில் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருந்தார்.

கோரிக்கையை ஏற்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூபாய் 34.67 கோடி செலவில் சுமார் 1.9 கி.மீ தூரத்திற்க்கு 28 ஆயிரத்து 100 சதுர மீட்டர் பரப்பளவில் சீரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குழந்தைகளுக்கான விளையாட்டு திடல்!, கைப்பந்து, கபடி மைதானம், குத்துச்சண்டை வளையம், உடற்பயிற்சி கூடம், தியான மண்டபம், சாலையோர வியாபாரிகளுக்கான தளம், சிற்பங்கள், கடைகள், சூரிய மின் விளக்குகள், காண்காணிப்பு கேமராக்கள், ஆண், பெண், மாற்றுத் திறனாளிகளுக்கான ஒப்பனை அறைகள், செல்பி ஸ்பாட், நடைபாதை, வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு நவீன கட்டமைப்பு வசதிகளுடன் அழகுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

கடற்கரையை அழகுப் படுத்தும் பணியை மாநில மீனவரணி துணைத்தலைவர் கே.பி.சங்கர் அவர்கள் கே.வி.கே.குப்பம் கடற்கரைப் பகுதியில் 12.03.2024 அன்று மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், எம்.எஸ்.நாகலிங்கம், பானுமதி சந்தர், இ. ரமேஷ், ஏகா.கார்த்திகேயன், கே.கார்த்திகேயன், கே.தேசிங்கு, எஸ். கே.இளங்கோ, டி.மகேந்திரன், எஸ்.செல்வம், ஆர். குமரன், எம்.எல் வேலன், கே.சந்தோஷ் குமார், பிரிட் சுரேஷ் பாலஉமாபதி, கே.செந்தில் குமார், கலை சரவணன், தங்கவேல், சார்லஸ், ஜெயா, மதுரை முத்து, ஜோதி, கலையழகன் ஜெயபால், செல்வகுமார், சிகாமணி மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அதிகாரிகள், மாநகராட்சி அலுவலர்கள், கிராம நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (18.03.2024) தலைமைத் தேர்தல் அதிகாரி / அரசு முதன்மை செயலாளர் சத்யபிரத சாகு, தலைமையில், மக்களவை தேர்தல் 2024 தொடர்பாக, அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல் ஆணையர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருடன் காணொலி காட்சி வாயிலாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி சங்கர்லால் குமாவத், இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி ஸ்ரீகாந்த், ஏடிஜிபிக்கள் மகேஷ் குமார் அகர்வால், எச்.எம்.ஜெயராம், ஐஜி ரூபேஷ் குமார் மீனா, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 2024 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் 19.04.2024 அன்று நடைபெறுவதையொட்டி, சென்னை மாவட்டத்தில் பொதுமக்களிடையே 100 சதவீதம் வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையிலான ”வாக்களிப்பது நம் அனைவரின் ஜனநாயகக் கடமை என்ற விழிப்புணர்வு பேனர் முன்பு மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், அவர்கள் நின்று விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். உடன் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர். லலிதா, (கூடுதல் ஆணையாளர் (வ (ம) நி), டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்), சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, டாக்டர் ஜி. எஸ். சமீரன், இணை ஆணையாளர் (பணிகள்), திருமதி ஷரண்யா அறி, (துணை ஆணையாளர் (கல்வி), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி. அமித், (தெற்கு), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## சென்னை மாவட்டத்தில்

# தேர்தல் நடத்தை நெறிமுறைகள் குறித்த கூட்டம்!

### அரசியல் கட்சி பிரமுகர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் ஜெ. ராதாகிருஷ்ணன் கலந்தாலோசனை!

சென்னை, மார்ச்.19-

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நாடாளுமன்ற பொதுத்தேர்தல்-2024 வருகின்ற 19.04.2024 அன்று நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் 16.03.2024 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முழுமையாக அமலுக்கு வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், தலைமையில் நேற்று (18.03.2024) ரிப்பன் கட்டட அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் பேசும்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கான நடத்தை விதிமுறைகள் குறித்து தெரிவித்ததாவது:

வேட்புமனுத்தாக்கல் 20.03.2024 அன்று முதல் 27.03.2024 வரை நடைபெறும். வேட்புமனு பரிசீலனை 28.03.2024 அன்றும், வேட்புமனு வாபஸ் பெற கடைசி நாள் 30.03.2024 அன்றும், வாக்குப்பதிவு நாள் 19.04.2024 மற்றும் வாக்கு எண்ணிக்கை 04.06.2024 அன்றும் நடைபெற உள்ளது.

**வேட்பாளர்களுக்கான நடத்தை விதிமுறைகள்**

தேர்தலில் வாக்குகளைப் பெற வாக்காளர்களுக்கு கையூட்டு வழங்குவதோ, வாக்காளர்கள் வாக்களிக்க கையூட்டு பெறுவது ஆகியவை தேர்தல் விதிமுறைகளுக்கு எதிரான செயலாகும். இதுபோன்ற குற்றங்கள் கண்டறியப்பட்டால் இந்திய தண்டனைச் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வாக்காளர்களை அச்சுறுத்துதல், ஆள்மாறாட்டம் செய்தல், தேர்தல் பரப்புரைக்கான நிறைவு நேரத்தில் இருந்து, வாக்குப்பதிவு முடிவுறும் வரையிலான 48 மணி நேரத்திற்குள் (Silence Period) பொதுக்கூட்டங்கள் நடத்துதல், வாக்குச்சாவடிகளில் இருந்து 100 மீ. சுற்றெல்லைக்குள் தங்களது வாக்களிக்குமாறு கோருதல் ஆகியவை தேர்தல் நடத்தை விதிமுறைகளுக்கு எதிரான முறைகேடான செயல். மேலும், வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வரவும், வாக்கு செலுத்திய பின்னர் திரும்ப அழைத்துச் செல்லவும் வாகன வசதிகளை ஏற்படுத்தித் தருதல் தவிர்க்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

பிற அரசியல் கட்சி பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கு தடை ஏற்படுத்த முனைதல், பிற கட்சிக் கூட்டங்களில் தனது கட்சி ஆதரவாளர்களைக் கொண்டு கேள்வி எழுப்புவதன் மூலமும், துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்வதன் மூலமும் தொல்லை கொடுத்தல், பிற கட்சிப் பேரணிகள் நடைபெறும் பாதை வழியாக அடுத்த கட்சியினர் பேரணியை நடத்த முற்படுதல், ஒரு கட்சியினர் ஒட்டிய சுவரொட்டிகளை மற்றொரு கட்சியின் தொண்டர்கள் கிழித்து எறிதல் ஆகிய செயல்களில் ஈடுபடக் கூடாது.

பல்வேறு சாதி, இனம், மதம், மொழியை சார்ந்த மக்களிடையே வேறுபாடுகளை தீவிரமாக்கும் வகையிலான செயலிலோ, ஒருவருக்கொருவர் இடையில் வெறுப்பை உருவாக்கும் வண்ணம் அல்லது பதற்றத்திற்கு வழி செய்யும் எந்த செயலிலும் எந்த ஒரு கட்சியோ, வேட்பாளரோ ஈடுபடக்கூடாது. இன மற்றும் மத உணர்வுகளை தூண்டும் வகையில் வேண்டுகோள்கள் விடுக்கக்கூடாது. தேர்தல் பிரச்சார களமாக மசூதி, தேவாலயம் மற்றும் கோவில் போன்ற வழிபாட்டுத் தளங்கள் பயன்படுத்தப்படக் கூடாது.

**தேர்தல் செலவு கண்காணிப்பு**

தேர்தலின்போது, ஒவ்வொரு வேட்பாளரும் வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கு ஒருநாள் முன்பிருந்து, தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும் வரை புதிய வங்கிக் கணக்கினைப் பராமரிக்க வேண்டும். ஒரு வேட்பாளர் ஒரு தொகுதியில் ரூ.95 இலட்சம் வரை செலவழித்திட தேர்தல் ஆணையம் அனுமதி அளித்துள்ளது. வேட்பாளர் இவ்வரம்பிற்குட்பட்டே தேர்தல் செலவுகளை செய்ய வேண்டும். ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் முடிவுகள் வெளியிட்ட 30 நாட்களுக்குள் தங்கள் செலவுக் கணக்கினை மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் இந்திய தேர்தல் நடத்தை விதிகளின்படி, தகுதி நீக்கம் செய்யப்பட வழிவகை உண்டு.

வங்கிக் கணக்கானது வேட்பாளர் பெயரிலோ அல்லது அவரது முகவருடன் இணைந்தோ Joint Accountஆக தொடங்கப்பட வேண்டும். வேட்பாளரால் செலவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட தொகை, இந்த வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னரே செலவு செய்யப்பட வேண்டும். செலவு செய்யப்படும் தொகையானது காசோலையாகவே செலுத்தப்பட வேண்டும். காசோலையில்குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.10,000/-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**வாக்குப்பதிவு நாள்**

வாக்குச்சாவடியில் பணிபுரியும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் தொண்டர்களுக்கு, சார்ந்த கட்சியின் பெயர் மற்றும் வேட்பாளரின் பெயர் குறிப்பிட்ட அடையாள வில்லைகள் (Identity Badges) வழங்கப்பட வேண்டும். வாக்குச்சாவடிகள் இந்திய தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரக் கடிதம் அல்லது அனுமதிச் சீட்டு இன்றி வாக்குச்சாடிக்குள் நுழைய எவருக்கும் அனுமதி இல்லை.

**விளம்பரங்கள்**

வேட்பாளர் வேட்புமனுத்தாக்கல் செய்யும் போது அளிக்கும் சுயஉறுதிமொழி ஆவணத்தில் தனது சமூக வலைதள கணக்கு (Google, Twitter, Facebook) பற்றிய விவரங்கள் அளிக்க வேண்டும். சமூக வலைதளங்களில் அளிக்கப்படும் அரசியல் விளம்பரங்கள் முன் அனுமதி பெற்றதாக இருக்க வேண்டும். தேர்தல் பரப்புரை மற்றும் சமூக வலைதளங்களில் செய்யப்படும் விளம்பரங்களுக்குண்டான செலவுத் தொகையினை தேர்தல் செலவுக் கணக்கில் காண்பிக்கப்பட வேண்டும்.

அரசியல் கட்சியினை சார்ந்த இறந்து போன தலைவர்களின் சிலையினை மறைத்திட வேண்டியதில்லை. ஆனால் அவர்களின் சிலைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் கட்சி சின்னங்கள், கல்வெட்டுகள கட்டாயம் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். தேர்தல் தொடர்பான அரசியல் கட்சிகளின் ஊர்வலங்களில் தேசியக் கொடியினை பயன்படுத்த அனுமதி இல்லை. பொது இடங்களில் கட்சிக் கொடிகள், கொடிக் கம்பங்கள், கல்வெட்டுகள் இருக்கக் கூடாது. அவற்றை உடனடியாக அகற்றிக் கொள்ள சம்பந்தப்பட்ட நபர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அரசியல் கட்சி விளம்பரங்கள், தட்டிகள், போர்டுகள், கொடிகள், கம்பங்கள் உள்ளிட்ட பிற இனங்கள் அகற்றப்பட்டமைக்கான அறிக்கையினை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும். Tamil Nadu Open Places (Prevention to Disfigurement) Act 1959, பிரிவு 2ன்படி, பொதுமக்களின் பார்வைக்குரிய பகுதி என்பது தனியார் இடங்கள், கட்டடங்கள், தனிநபர்கள் பார்க்கக்கூடிய அல்லது அதன் வழியே கடந்து செல்லத்தக்க பொது இடங்கள் ஆகும். மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள தனியார் சுவர்களின் விளம்பரம் செய்ய அனுமதி இல்லை. அந்த இடத்தின் உரிமையாளர் அனுமதி பெற்று இருந்தாலும், சுவம் விளம்பரம் எழுதுதல், போஸ்டர்கள் ஒட்டுதல் போன்ற செயல்களைக் செய்யக் கூடாது. சொந்த இடத்தில் பேனர்கள், கொடிகள் கட்டி விளம்பரம் செய்தல், தனியார் வாகனங்களில் வாக்காளர்களை கவரும் வகையில் கட்சிக் கொடி, தலைவர்களின் படங்களை வைத்துக் கொள்ள அனுமதியில்லை. இவ்வகையில் பேனர்கள், கொடிகள் கட்டி விளம்பரம் செய்வதன் மூலம் தனிப்பட்ட வாக்காளர்களை கவரும் நிலை ஏற்பட்டால் அது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 171Hன்படி நடவடிக்கைக்குட்பட்டது. தவறுசெய்யும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.500 வரை அபராதம் விதிக்கப்படும்.

**பிரச்சார அலுவலகங்கள் திறத்தல்**

தற்காலிக பிரச்சார அலுவலகங்களை அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமித்தோ, வாக்குச்சாவடியிலிருந்து 200 மீ. பகுதிக்குள்ளோ அமைத்தல் கூடாது. இத்தற்காலிக அலுவலகங்களில் ஒரே ஒரு கட்சி கொடியினை, ஒரு கட்சி பதாகை போட்டோவை வைத்துக் கொள்ளலாம். மேற்படி அனுமதிக்கப்பட்ட பேனர் அளவு 4 x 8 ஆகும்.

**வாகனங்கள் பயன்படுத்தும் முறை**

தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அனுமதி ஆணையின் அசல் வாகனத்தின் முன் முகப்புப் பகுதியில் கட்டாயம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். அனுமதி பெறாத வாகனங்களை பிரச்சார நடவடிக்கைகளில் பயன்படுத்திட அனுமதியில்லை. 4 சக்கர வாகனங்களைத் தவிர பிற அமைப்புள்ள வாகனங்களை கட்சி வேட்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதியில்லை. அனுமதிக்கப்பட்ட வாகனங்களிலும் ஓட்டுநர் உள்பட 5 நபர்கள் மட்டும் பயணிக்க அனுமதியுண்டு. அதற்கு மேல் பயணிக்கக்கூடாது. மேற்கண்ட நடைமுறைகள் இருசக்கர வாகனங்களுக்கும் பொருந்தும்.

**நடத்தை விதிகள்**

மத்திய அமைச்சர்களோ, மாநில அமைச்சர்களோ அலுவல் ரீதியாக தேர்தல் அறிவிக்கப்பட்ட தொகுதிக்கு வந்து செல்லவும், நடத்தை விதிகள் அமுலுக்கு உள்ள காலங்களில் அமைச்சர்கள் எவரும் தேர்தல் நடத்தும் பணியில் உள்ள அலுவலர்களை அழைப்பதற்கோ அல்லது அவரது அலுவலகத்திற்கு வரச் சொல்லவோ அல்லது அரசு விருந்தினர் மாளிகைக்கு வரச் சொல்லவோ கூடாது. அமைச்சர்கள் எவரேனும் வேட்புமனுத்தாக்கல் செய்யும் நிகழ்வில் கலந்து கொண்டாலோ அல்லது தேர்தல் முன்னிட்டு தொகுதிக்குள் வந்து சென்றாலோ அவை அலுவலக ரீதியாக கருத்தில் கொள்ளப்படமாட்டாது. தேர்தல் ரீதியாக கருத்தில் கொள்ளப்படும். அலுவலகப் பணி ரீதியாக அமைச்சர்கள் வருகை தரும் நிகழ்வுகளில் தொகுதிக்குள் தங்க அனுமதியில்லை. தேர்தல் பணி ஏதும் அவர் கவனிக்கக்கூடாது. நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ள பொழுது காவல் பாதுகாப்பு பைலட் வண்டி அல்லது சைரன் வண்டி ஏதும் அமைச்சர்களுக்கு வழங்கப்பட மாட்டாது. அமைச்சர்கள், சேர்மன், வாரிய உறுப்பினர்கள் அரசு வாகனங்களைப் பயன்படுத்திட தடைவிதிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் பிரச்சாரத்திற்கு வருகைபுரியும் போது தங்களது தனிப்பட்ட வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால், தங்களது உதவிக்காக நியமிக்கப்பட்ட அரசு அலுவலர்களை கூட அழைத்து வருவதற்கோ அல்லது அவர்களின் உதவியினை பெற்றுக் கொள்ளவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது.

எதிர்பாராத நிகழ்வுகளான சட்டம், ஒழுங்கு பராமரித்தல், பேரிடர் நிகழ்வுகள் அல்லது அவசர நெருக்கடி நிலைமைகளில் அரசு வாகனங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தடையேதுமில்லை. உயிர் அச்சுறுத்தலுக்குள்ளான மத்திய அல்லது மாநில அமைச்சர்களுக்கு அரசால் வழங்கப்பட்ட பாதுகாப்புப் படை பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்படும். அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் பெண்களின் கௌரவம் மற்றும் கண்ணியத்திற்கு கேடு விளைவிக்கும் எந்தவொரு செயல்/செயல்பாடுகள்/சொற்கள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் பொதுமக்களிடையே 100% வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வகையிலான “”நான் வாக்களிக்கத் தயாராக உள்ளேன்”, “என் வாக்கு, என் உரிமை!” என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய தன்படம் (Selfie Point) எடுக்கும் வகையிலான பதாகையில் நின்று புகைப்படம் எடுத்து விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். மேலும், “நான் வாக்களிக்க ஆவலுடன் உள்ளேன்”, “என் வாக்கு, என் உரிமை!” என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய கையெழுத்துப் பலகையில் கையெழுத்திட்டு விழிப்புணர்வினை ஏற்படுத்தினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ஆர்.லலிதா, (கூடுதல் ஆணையாளர் (வ (ம) நி), டாக்டர் வி. ஜெய சந்திர பானு ரெட்டி, (கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்), சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, டாக்டர் ஜி. எஸ். சமீரன், (இணை ஆணையாளர் (பணிகள்), திருமதி ஷரண்யா அறி, (துணை ஆணையாளர் (கல்வி), தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/ வட்டார துணை ஆணையாளர்கள் எம்.பி. அமித், (தென் சென்னை), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய சென்னை), கட்டா ரவி தேஜா, (வட சென்னை), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்கள்) ச.சுரேஷ் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 மற்றும் 101 (அ) வட்ட பாக முகவர்கள் (பி.எல்.ஏ 2) மற்றும் பாக நிலை உறுப்பினர்கள் (பி.எல்.சி) ஆலோசனைக் கூட்டம் 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் 101 (அ) வட்டக் கழகச் செயலாளர் சி.பி. திருமலை முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம். கே.மோகன், வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், அண்ணாநகர் தொகுதி பார்வையாளர் சி.பத்மப்ரியா, 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் மற்றும் வட்டக் கழக ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.